**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.70/2024 நாள்- 02.06.2025

**வா.சா.1- தங்கராஜ்**

**வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்**

பிரதிவாதி சந்தனமாரி வீட்டு வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான் . அவர் படிப்பறிவு இல்லாதவர் எனறால் சரிதான். நான் பல நபரிடம் வட்டிக்கு பணம் கொடுத்து வரும் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. 30.04.2019 ம் தேதி பிரதிவாதி என்னிடம் கடன் பெற்றுக் கொண்டு வா.சா.ஆ.2 அடமான ஆவணம் எழுதிக் கொடுத்தாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 2018 ம் ஆண்டே 50,000 மட்டுமே கடன் பெற்றிந்தார் என்றும் , அந்த அசலுக்காக மாதம் தோறும் தவறாமல் வட்டி செலுத்தி வந்தார் என்றும், அசல் தொகை ரூ.50,000/-யை நான் உடனடியாக திருப்பிச் செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தினேன் என்றும், பிரதிவாதியால் செலுத்தமுடியாததால் 3 மடங்கு தொகைக்காக அடமான கடன் பத்தி்ரம் எழுதிக் கொடுக்கவேண்டும் என்று நான் கட்டாயப்படுத்தியதால் பயந்துபோன பிரதிவாதி வா.சா.ஆ.2 அடமானக் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ன் படி பிரதிவாதி என்னிடம் இருந்து ஒருபோதும் ரூ.1,50,000/- கடனாக பெற்றுக் கொண்டது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 01.11.2021 ம் தேதியிட்ட கடன் ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.3 பிரதிவாதி ஒருபோதும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி முன்னமே பெற்றுக் கொண்ட கடனுக்கு வட்டி எதுவும் செலுத்தவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2019 ம் ஆண்டு கொடுத்த கடனுக்கே அவர் வட்டி செலுத்தாதநிலையில் 2021 ம் ஆண்டு மீண்டும் ரூ.50,000/- கடன் கொடுத்தாக சொல்லுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பத்தைவைத்து வா.சா.ஆ.3 மோசடியாக உற்பத்தி

செய்யப்பட்ட ஆவணம் என்றும், வா.சா.ஆ.3 ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று பிரதிவாதி மறுத்த பிறகு பிரதிவாதியின் கையொப்பம் தான் என்று நிருபிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பிராதில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எந்தவிதமான தொகையையும் செலுத்த கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.